# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணி இறுதித் தேர்வு, ஆண்டு IV - 2017

### சட்டவியல்
(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

1. இயற்கைச் சட்டக் கோட்பாடானது (Natural law theory) தற்கால உலகினை ஆளுகின்ற பல எண்ணக்கருக்களில் செல்வாக்கினைச் செலுத்தியுள்ளது. எனினும், வரலாற்று ரீதியாக இயற்கைச் சட்ட பாரம்பரியத்தினை எதிர்த்த சிந்தனையாளர்கள் பலர் இக் கோட்பாட்டினை விமர்சித்து வந்துள்ளனர்.

   இயற்கைச் சட்ட கோட்பாட்டின் முக்கியமான மூன்று பங்களிப்புக்கள் மற்றும் இக் கோட்பாட்டிற்கெதிராக செய்யப்பட்ட முக்கியமான மூன்று விமர்சனங்கள் என்பவற்றினை விபரித்து மேலுள்ள கூற்றினை ஆய்ந்துரைக்க.

2. சமகால சட்ட முறைமையொன்றில் H.L.A ஹார்ட்டின் (Hart) சட்டக் கோட்பாட்டின் பிரயோகத்தினை நுணுக்கமாக ஆய்ந்துரைக்க. ஒன்றிற்கு மேற்பட்ட நியாயாதிக்கங்களினைப் பயன்படுத்தி உமது ஆய்ந்துரையினை விபரிக்குமாறு நீர் வேண்டப்படுகின்றீர்.

3. ஹான்ஸ் ஹெல்சனின் (Hans Kelsen) சட்டத் தூய்மைக் கோட்பாட்டு (Pure Theory of Law) பின்னணியில், *குருண்நோம் (Grundnorm)* கொள்கையானது (doctrine) எவ்வாறு

கடினமான புரட்சிக்குப் பிந்தைய அரசியல் மற்றும் அரசியலமைப்பு அனுபவங்களினை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டது என்பதனை நுணுக்கமாக ஆய்ந்துரைக்க.

4. "பொதுச் சட்டத்திற்கான (common law) உண்மையான இடரென்பது, புதிய சூழ்நிலைகளையும் புதிய அறிவினையும் உள்ளடக்குவதற்கான அதனுடைய நகர்வில் இல்லாது ஆனால் பழைமைவாத நீதித்துறை அணுகுமுறையொன்றினால் நிறுத்தி வைக்கப்படும் அதன் நகர்விலேயே உள்ளது."

Lord Scarman in *McLouglin v. O'Brian* [1983] 1 AC 410, at p 430

மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது ஆய்ந்துரையானது றொனால்ட் டோர்க்கினுடைய (Ronald Dworkin) நீதித்துறை வகிபங்கு கோட்பாட்டுப் (theory of the judicial role) பின்னணியில் அமைதல் வேண்டும்.

5. "பகிரங்க மற்றும் தனியார் பொருளாதார முயற்சி மற்றும் அத்தகைய பகிரங்க மற்றும் தனியார் பொருளாதார முயற்சியை சமூகக் குறிக்கோள்களுக்காகவும் பொதுமக்கள் நலனுக்காகவும் நெறிப்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் பொருத்தமானதான அத்தகைய திட்டமிடல் மற்றும் கட்டுப்பாடுகளை விதந்துரைக்கின்ற சட்டங்கள் என்பவைகளின் மூலம் நாடு முழுவதற்குமான துரித அபிவிருத்தியை தாபிக்க அரசு உறுதி பூண்டுள்ளது... "

இலங்கையின் அரசியலமைப்பு (1978) உறுப்புரை 27(2) (ஈ)

"திட்டமிடுதல் மற்றும் கட்டுப்படுத்தல்" என்பவற்றினூடாக நாட்டினுடைய அபிவிருத்தி மற்றும் மக்களின் மனிதவுரிமைகளினை மேம்படுத்தல் என்பவற்றுக்கிடையில் சமநிலையொன்றினை பேணுவதற்கு அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டவாக்க முயற்சியொன்றினை, சட்டத்தில் சமூகவியற் கோட்பாட்டினைப் (sociological theory of law) பயன்படுத்தி ஆய்ந்துரைக்க.

6. (அ) அல்லது (ஆ) இற்கு விடை தருக.

(அ) பெண்நிலைவாத சட்டக் கோட்பாடானது (Feminist legal theory) பெண்கள் சட்டத்திற்குக் கீழ்ப்படிதலில் கவனஞ் செலுத்துவதுடன் பெண்களை பாரபட்சத்திற்குள்ளாக்குகின்ற சட்டங்கள், நடைமுறைகள் மற்றும் பொறிமுறைகளை மாற்றுவதில் அர்ப்பணிப்புடன் உள்ளது. எனினும், இந்தப் பொதுவான குறிக்கோளினை அடைவதில் கோட்பாட்டாளர்களினால் வேறுபட்ட அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. அவ்வாறான மூன்று அணுகுமுறைகளினை ஆய்ந்துரைப்பதுடன், இலங்கையின் பாலின பாகுபாட்டு சட்டங்களினை மறுசீரமைப்பதில் எந்த அணுகுமுறை அதிகம் பொருத்தமாகவுள்ளது என்பதனை விளக்குக.

(ஆ) விமர்சன சட்டக் கற்கைகள் (critical legal studies ) இயக்கத்தினரால் அடையாளங் காணப்பட்டவாறான தாராளவாத சட்ட முறைமைகளின் கீழான ஒடுக்குமுறை மற்றும் அந்நியமாதல் என்பவைகளையும் விமர்சன சட்ட கற்கையாளர்களினால் முன்மொழியப்படுகின்ற மாற்றுத் தீர்வினையும் நுணுக்கமாக ஆய்ந்துரைக்க.

7. ஜோன் ரோல்ஸ் (John Rawl) இனுடைய விநியோக நியாயக் கோட்பாடானது (distributive justice theory) மிகவும் பிரத்தியேகமானதாகவும் தாராளவாதமானதாகவும் உள்ளதென விபரிக்கப்படுகின்றது. நுணுக்கமாக ஆய்ந்துரைக்க.